# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.197/2023

Deposition of witness – PW-2

| | | | |
|---|---|---|---|
| Name | : சத்யா | Caste | : |
| W/o. | : செல்வராசு | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 18.02.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை :

நான் ஊனத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். அவர் எங்கள் ஊரை சேர்ந்தவர். பெருமாள் மனைவி காயத்ரியை எனக்குத் தெரியாது. பெருமாளும் எதிரி ஆனந்தனும் அடித்துக்கொண்டதாக கேள்விப்பட்டேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. நான் சம்பவத்தின்போது மருத்துவமனையில் இருந்தேன். 10 நாட்கள் கழித்துதான் வீட்டிற்கு வந்தேன். போலிசார் என்னை வழக்கு

சம்மந்தமாக விசாரித்தார்கள். ஆனால் எனக்கு தெரியாது என்று நான் கூறிவிட்டேன்.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.

<u>அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை</u> :

வழக்கு சம்மந்தமாக நான் கேள்விப்பட்டு சம்பவ இடம் சென்று பார்த்தேன் என்றும் அப்போது பெருமாளுக்கு அடிபட்டிருந்தது என்றும் பெருமாளை 108 ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்று போலிசாரிடம் வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது எதிரி உள்ளூர்க்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.